(4)

ஏனது இல. என்பி /சிஓ/திட்/பொது/4/98,
கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்,
வடக்கு கிழக்கு மாகாணம்,
திருகோணமலை..
04.06.98.

சுற்றறிக்கை இல: 4/98

சகல ப.நோ.கூ.சங்கங்களுக்கும்,
ஏனைய பாரிய அளவிலான கூட்டுறவுச் சங்கங்களுக்கும்.

## பொருட் கொள்வனவு

கூட்டுறவுச் சங்கங்களால் வியாபாரப் பொருட்களோ அல்லது வேறு பொருட்களோ கொள்வனவு செய்யப்படும் பொழுது கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் பற்றி ஏற்கனவே பல அறிவுறுத்தல்கள் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் அவை சரிவரக் கடைப்பிடிக்கப்படாமையால் பல மோசடிகள் இடம் பெற்றுள்ளமை எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இதனால் பொருட் கொள்வனவு தொடர்பாக பின்வரும் நடைமுறைகளைக் கடைப்பிடிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறீர்கள்.

1. கொள்வனவு உப சபை:

ப.நோ.கூ.சங்கமொன்றில், சகல கொள்வனவுகள் தொடர்பாகவும் உபசபை ஒன்று இருத்தல் வேண்டும். இவ்வுப சபையின் விதப்புரைக்கமைய நெறியாளர் குழு தீர்மானங்களை மேற்கொண்டு கொள்வனவுகளை அனுமதிக்கலாம். இவ்வுபசபையில் சங்கத்தலைவர்/ உபதலைவருடன் இரு நெறியாளர் குழு உறுப்பினர்கள் ,பொது முகாமையாளர் ,வர்த்தக முகாமையாளர் , மொத்தக் களஞ்சியப் பொறுப்பாளர், கிளை மேற்பார்வையாளர் ஒருவர் ,பொதுச் சபை உறுப்பினர் ஒருவர் அங்கம் வகித்தல் வேண்டும். இவ்வுபசபை தேவைக்கேற்ப கூடலாம். இதன் அறிக்கை அடுத்து வரும் நெறியாளர் குழுக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட வேண்டும். தேவையான பொருட்களை 23, 23 'அ' படிவங்கள் மூலம் அறிந்து முன்கூட்டியே தீர்மானங்களை மேற்கொள்ளுதல் சிறந்தது.

2. உள்ளூர் கொள்வனவு:

அரிசி, உழுந்து, பயறு, நிலக்கடலை, நல்லெண்ணெய் போன்ற பொருட்கள் உள்ளூரில் கொள்வனவு செய்யப்படக்கூடியவை. இவற்றை கொள்வனவு செய்யும் பொழுது பின்வரும் நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படல் வேண்டும். உதாரணமாக அரிசி கொள்வனவு செய்வதாயின் நெல் குற்றும் ஆலை உரிமையாளர்களிடமிருந்து இலாஞ்சனையிட்ட கேள்விப்பத்திர முறை மூலம் விண்ணப்பங்கள் கோரப்படலாம். இவ்விண்ணப்பத்துடன் வழங்கக் கூடிய அரிசியின் மாதிரி பொட்டலம் ஒன்றும் விண்ணப்பதாரரால் கையளிக்கப்படல் வேண்டும். இக்கேள்வி விண்ணப்பம் மேலே குறிப்பிட்ட உபசபையினதும்,

கேள்விக்காரர்களதும் முன்னிலையில் திறக்கப்பட்டு விலை, தரம் என்பன அவதானிக்கப்பட்டு எவரிடம் எவ்வளவு கொள்வனவு செய்யப்படலாம் எனத் தீர்மானிக்கப்படல் வேண்டும். இதில் பக்கச் சார்பான தீர்மானங்கள் எதுவும் இடம்பெறலாகாது. இந்நடைமுறை ஏனைய பொருட்கொள்வனவுகளின் போதும் கடைப்பிடிக்கப்படலாம்.

3. <u>ஏனைய வெளிக் கொள்வனவுகள்:</u>

3.1 <u>அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனங்களில் கொள்வனவு:</u>

முடியுமான அளவு பொருட்களை, அவற்றை உற்பத்தி செய்யும் அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனங்களிடமிருந்தோ அல்லது அவற்றின் முகவர்களிடமிருந்தோ கொள்வனவு செய்தல் வேண்டும். (உதாரணம்: லிவர் ஸ்தாபனம், நெஸில்ஸ், அரச கூட்டுத்தாபனம், கூ.மொ.வி.ஸ்தாபனம், கூ.ஸ்தாபனங்கள் போன்றன) இவ்வித ஸ்தாபனங்களில் இல்லாத பொருட்களை மட்டுமே வெளிச் சந்தையில் கொள்வனவு செய்தல் வேண்டும்.

3.2 <u>வெளிச்சந்தைக் கொள்வனவு:</u>

வெளிச்சந்தையில் பொருட் கொள்வனவு செய்யப்பட முன்னர் கூறு விலைகள் பெறப்படல் வேண்டும். பெறப்பட்ட கூறு விலைகளின் அடிப்படையில் பொருட்களின் தரம், விலை, தேவை என்பன ஆராயப்பட்டு கொள்வனவுகள் செய்யப்படல் வேண்டும். ஒரு தனியார் ஸ்தாபனத்திலேயே தொடர்ச்சியாக கொள்வனவு செய்தல் தவிர்க்கப்படுதலும் வேண்டும்.

3.3 <u>கொள்வனவில் ஈடுபடுவோர்:</u>

சங்கத்தின் வர்த்தக முகாமையாளர் அல்லது கொள்வனவில் ஈடுபடுவோர் நெறியாளர் குழுத் தீர்மானங்களுக்கு அமைவாகவும், பொது முகாமையாளரின் கட்டுப்பாட்டின் கீழும், சங்கத்தின் ஆதாயத்தைக் குறிக்கோளாகக் கொண்டும் கொள்வனவில் ஈடுபடுதல் வேண்டும். கொள்வனவு உத்தியோகத்தர் ஒருவர் கடமையைச் சரிவரச் செய்யவில்லையென நெறியாளர் குழு கருதுமிடத்து, மேற்பார்வைக்காகவும், தகவல்களைப் பெறுவதற்காகவும் அவசியமான மாற்று ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும்.

3.4 <u>கொள்வனவுப் பொருட்களை களஞ்சியத்தில் ஒப்படைத்தல்:</u>

கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் பார ஊர்தியொன்றுக்குப் பாரப்படுத்தப்படும் பொழுது படிவம் 25 தயாரிக்கப்படல் வேண்டும். இப்பொருட்கள் களஞ்சியத்துக்கு கொண்டு வரப்பட்டதும், வகை சொல்லக் கூடிய அலுவலர் ஒருவர் முன்னிலையில் இறக்கப்பட்டு அளந்தும், நிறுத்தும், எண்ணியும் மொத்தக் களஞ்சியப் பொறுப்பாளரிடம் கையளிக்கப்படல் வேண்டும். தரமற்ற, பழுதடைந்த அல்லது விற்க முடியாத பொருட்களை கையேற்றல் ஆகாது. களஞ்சியப் பொறுப்பாளரிடம் ஒப்படைக்க முடியாத பொருட்களுக்கும் அல்லது ஏற்படும் குறைவுகள், நட்டங்களுக்கும் கொள்வனவு செய்தவரே பொறுப்பாளியாவார்.

3.5 நாட்டின் சூழ்நிலையும் கொள்வனவும்:

நாட்டில் தற்பொழுது நிலவும் சூழ்நிலையைக் காரணம் காட்டி பல கூட்டுறவு அமைப்புக்கள் பொருட்கொள்வனவு தொடர்பாக விதிமுறைகள் எதனையும் அனுசரிக்காது செயற்பட்டு வருவது எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. பொருட்கள் தட்டுப்பாடாக உள்ளன எனக் கூறி தனியார் நிறுவனங்களில் கடன் அடிப்படையில் கூடிய விலையில் பெருமளவில் கொள்வனவுகள் செய்யப்பட்டு சங்கங்களுக்கு எடுத்துச் செல்லும் நிலை உள்ளது. இதனால் சாதாரண நுகர்வோரே பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். இவற்றை கூடுமான அளவு தவிர்க்க நிர்வாகம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. கேள்விப்பத்திர நடைமுறை:

அரச திணைக்களங்களிலும், கூட்டுத்தாபனங்களிலும் கடைப்பிடிக்கப்படும் கேள்விப்பத்திர நடைமுறை, சங்கங்களிலும் கடைப்பிடிக்கப்படலாம். உள்ளூர் உற்பத்திப் பொருட்களுக்கான கேள்விப்பத்திரங்கள் உற்பத்தியாளர்களிடம் இருந்து மட்டுமே கோரப்படல் வேண்டும். உதாரணமாக அரிசி கொள்வனவின் போது, தரமான அரிசி உற்பத்தி செய்யும் மில் உரிமையாளர்களிடமிருந்து மட்டுமே கேள்விப்பத்திரங்கள் கோரப்படல் வேண்டும். இவ்வாறான கேள்விப்பத்திரங்களில் நிபந்தனைகள் குறிப்பிடப்பட்டு, விளம்பரம் செய்யப்பட்டு, கேள்வியினை கையேற்கும் முறையும் தெளிவாக்கப்படுதல் வேண்டும். சகல சந்தர்ப்பங்களிலும் இரகசியம் பேணப்படுவதுடன், இரு பகுதியினரும் நாணயமாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

5. கொள்வனவு உபசபைக் கூட்டங்கள், நெறியாளர் குழுக் கூட்டங்களில் எடுக்கப்படும் முடிவுகளுக்கு சம்மந்தப்பட்ட நெறியாளர்களே பொறுப்பை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் பற்றிய முடிவுகளில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலாளரின் பிரதிநிதி ஆகியோரின் ஆலோசனைகளை பெறுதல் என்ற போர்வையில் நெறியாளர் குழுக்கள் தமது பொறுப்பினின்றும் விலகிச் செல்வதும் ஆலோசனைகள் வழங்குவதற்குச் சமூகமளிக்கும் உத்தியோகத்தர்கள் மீது பொறுப்பைச் சுமத்துவதும் தவிர்க்கப்படல் வேண்டும்.

க.சண்முகலிங்கம்,

கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்,
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்(வகி).